நகராட்சி அலுவலகம், ஆத்தூர்,
(சேலம் மாவட்டம்),
நாள்.31 .05.2021.

இயல்புக்கூட்டம்

அன்புடையீர்,

2021ம் வருடம் மே மாதம் 31.05.2021ந் தேதி திங்கள் கிழமை இயல்புக்கூட்டம் காலை11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலித்து முடிவு செய்ய இருக்கிறது.

தனி அலுவலர்,
ஆத்தூர் நகராட்சி.

பொருள்கள்

1. இந்நகராட்சியில் கடந்த மூன்று ஆண்டுகளில் செய்து முடிக்கப்பட்டுள்ள மற்றும் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை பொதுமக்கள் அறியும் வண்ணம் மூன்றாண்டு சாதனை மலரில் ஆத்தூர் நகராட்சி சார்பாக தினத்தந்தி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பர கட்டணத் தொகை ரூ.29,236/-ஐ விளம்பரம் செய்த நிறுவனமான தினத்தந்தி என்ற நிறுவனத்தாருக்கு வழங்க தனி அலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியிலிந்து வழங்கவும் தனி அலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1068/2021/இ1

2. ஆத்தூர் நகராட்சி அலுவலகத்திலுள்ள ஆணையர் பிரிவு பொது பிரிவு, பொறியியல் பிரிவு, பொது சுகாதாரபிரிவு, வருவாய் பிரிவு, நகரமைப்புபிரிவு, கணிணி பிரிவு , தேர்தல் பிரிவு மற்றும் காசாளர் பிரிவு ஆகிய அறைகளிலுள்ள 26 கணிணிகள், மானிட்டர்கள், 20 பிரிண்டர்கள், ஸ்கேனர், ஜெராக்ஸ் பிரிண்டர், கலர்லேசர் பிரிண்டர், C CTV கேமிராக்கள், LED TV அலுவலகத்தின் கீழ்தளத்திலுள்ள UPS பேட்டரிகள் மற்றும் மேல் தளத்திலுள்ள UPS பேட்டரிகள் ஆகியவற்றினை 01.07.2021 முதல் 30.06.2022 முடிய ஒராண்டில் (A.M.C) அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் மற்றும் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணிக்கு, ஆகும் செலவினம் ரூ.2.11 இலட்சத்திற்கு தனி அலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அனுமதி வழங்கலாம், செலவினத்தை பொது நிதியிலிந்து வழங்கவும் தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை தொடரவும் தனி அலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1496/2021/இ1

3. ஆத்தூர் நகராட்சி அலுவலகத்திலுள்ள பொது பிரிவு கணிணியில் மதர்போர்டு பழுதடைந்துள்ளது அதனை எடுத்துவிட்டு புதியதாக மதர்போர்டு பொருத்துதல் மற்றும் மின் இயற்றி இல்லாததினால் புதியதாக மின் இயற்றி பொருத்துதல் மற்றும் பொறியியல் பிரிவு நகராட்சி பொறியாளர் அறையிலுள்ள மோடம் பழுதடைந்துள்தை அதனை மாற்றி புதியதாக மோடம் பொருத்துதல் மற்றும் இணையதளம் பகிர் இல்லாததினால் புதியதாக இணையதளம் பகிர் பொருத்துதல் ஆகியன செய்து தொடர்ந்து கணிணிகளை இயக்குவதற்கு ஆகும், ரூ.13,700/–க்கு தனி அலவலரின் ஒப்புதலும், மேலும் இந்நகராட்சியில் கணிணிகள் மற்றும் பிரிண்டர்களுக்கு ஆண்டு பராமரிப்பு பணிகளை செய்து வரும் நிறுவனமான M/S.Spyder Technology சேலம் என்ற நிறுவனத்தார் மூலம் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்படைப்பு பணியாக செய்யவும் தனி.அலவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம், செலவினத்தை பொது நிதியிலிந்து வழங்கவும் தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி ஆண்டு பராமரிப்பு பணிகளை செய்து வரும் நிறுவனமான M/S.SpyderTechnology சேலம் என்ற நிறுவனத்தாருக்கு ஒப்படைப்பு பணிக்கு வேலை உத்தரவு வழங்கவும், தனி அலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்1494/2021/இ1)

4. ஆத்தூர் நகராட்சி அலுவலகத்திலுள்ள ஆணையர் பிரிவு, பொது பிரிவு, வருவாய் பிரிவு, கணிணி பிரிவு, காசாளர் பிரிவு, பொறியியல் பிரிவு, பொது சுகாதாரபிரிவு, நகரமைப்புபிரிவு, மற்றும் தேர்தல் பிரிவு ஆகிய அறைகளிலுள்ள 26 கணிணிகள் மற்றும் 20 பிரிண்டர்களுக்கு அலுவலகத்தின் கீழ்தளத்திலுள்ள UPS பேட்டரிகள் வாயிலாக அனைத்திற்கும் இதிலிருந்து ஒரே இணைப்பாக UPS மின்வசதி செய்யப்பட்டுள்ளது. இதனால் மின்தடை ஏற்படும் போது மேற்படி UPS பேட்டரிகள் இயங்குவதில் மின் திறன் குறைந்து மின் தடை ஏற்படுகிறது. மேலும் மேற்படி UPS பேட்டரிகள் 2015ம் ஆண்டில் வாங்கியதால் இதனுடைய திறன்அளவு குறைந்துள்ளது. எனவே இதனை எடுத்து விட்டு அலுவலகத்திலுள்ள ஆணையர் பிரிவு பொது பிரிவு, வருவாய் பிரிவு, கணிணி பிரிவு மற்றும் காசாளர் பிரிவு ஆகியன கீழ் தளத்தில் உள்ளவைகளுக்கு தனியாக ஒருபகுதி UPS பேட்டரிகள் புதியதாக இணைப்பும் மற்றும் அலுவலகத்தின் மேல் தளத்தில் பொறியியல் பிரிவு, பொது சுகாதாரபிரிவு, நகரமைப்புபிரிவு, மற்றும் தேர்தல் பிரிவு ஆகிய அறைகளிலுள்ள கணிணிகளுக்கு தனியாக ஒருபகுதி UPS பேட்டரிகள் புதியதாக இணைப்பும் ஒயரிங் செய்து இணைப்புகள் வழங்க ஆகும், செலவினம் ரூ.19,100/–க்கு தனி.அலவலரின் ஒப்புதலும், மேலும் இந்நகராட்சியில் கணிணிகள் மற்றும் பிரிண்டர்களுக்கு ஆண்டு பராமரிப்பு பணிகளை செய்து வரும் நிறுவனமான M/S.Spyder Technology, சேலம் என்ற நிறுவனத்தார் மூலம் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்படைப்பு பணியாக செய்யவும் தனி.அலவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம், செலவினத்தை பொது நிதியிலிந்து வழங்கவும் தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி ஆண்டு பராமரிப்பு பணிகளை செய்து வரும் நிறுவனமான M/S.Spyder Technology சேலம் என்ற நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கவும் தனி அலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1495/2021/இ1

5. ஆத்தூர் நகராட்சி அலுவலகத்திலுள்ள ஆணையர் பிரிவு, பொது பிரிவு, வருவாய் பிரிவு, கணிணி பிரிவு, காசாளர் பிரிவு, பொறியியல் பிரிவு, பொது சுகாதாரபிரிவு, நகரமைப்புபிரிவு, மற்றும் தேர்தல் பிரிவு ஆகிய அறைகளிலுள்ள 26 கணிணிகள் மற்றும் 20 பிரிண்டர்களுக்கு அலுவலகத்தின் கீழ்தளத்திலுள்ள UPS பேட்டரிகள் வாயிலாக அனைத்திற்கும் இதிலிருந்து ஒரே இணைப்பாக மின்வசதி செய்யப்பட்டுள்ளது. இதனால் மின்தடை ஏற்படும் போது மேற்படி UPS பேட்டரிகள் இயங்குவதில் மின் திறன் குறைந்து மின் தடை ஏற்படுகிறது. மேலும் மேற்படி UPS பேட்டரிகள் 2015ம் ஆண்டில் வாங்கி பொருத்தப்பட்டுள்ளதால் இதனுடைய திறன் அளவு குறைந்துள்ளது. எனவே இதனை எடுத்து விட்டு அலுவலகத்திலுள்ள ஆணையர் பிரிவு பொது பிரிவு, வருவாய் பிரிவு, கணிணி பிரிவு மற்றும் காசாளர் பிரிவு ஆகியன கீழ் தளத்தில் உள்ளவைகளுக்கு தனியாக UPS பேட்டரிகள் புதியதாக பொருத்தவும் மற்றும் அலுவலகத்தின் மேல் தளத்தில் உள்ளவைகளுக்கு தனியாக UPS பேட்டரிகள் புதியதாக கொள்முதல் செய்து பொருத்துவதற்கு (Govt E-Market ) அரசு இணைய சந்தை விலை விற்பனையாளர் விலை விகிதத்தில் புதியதாக UPS பேட்டரிகள் M/S.Spyder Technology, சேலம் என்ற நிறுவனத்தார் கொள்முதல் செய்ய ஒப்புதல் கடிதம் அளித்துள்ளதால் அவைகளை கொள்முதல் செய்து பொருத்துவதற்கு ஆகும் செலவினம் ரூ.2,53,000/–க்கு ஒப்புதலும், மேற்படி UPS பேட்டரிகளை M/S.Spyder Technology, சேலம் என்ற நிறுவனத்தார் மூலமாக கொள்முதல் செய்வதற்கு தனி அலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

1. அனுமதிக்கலாம்,செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

2. புதியதாக UPS பேட்டரிகளை (Govt E-Market ) அரசு இணைய சந்தை விலை, விற்பனையாளர் விலை விகிதத்தில் கொள்முதல் செய்வதற்கு ஒப்புதல் கடிதம் அளித்துள்ளதால் M/S.Spyder Technology, சேலம் என்ற நிறுவனத்திற்கு கொள்முதல் உத்தரவு வழங்கவும், தனி அலுவலர் அனுமதி வழங்கலாம் (ந.க.எண் 1497 /2021/இ1)

6. ஆத்தூர் நகராட்சிக்கு, ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2020–2021ம் ஆண்டிற்கான நிதியில் ஆத்தூர் நகராட்சி வார்டு எண்.8ல் நேருநகர் கால்வாய் அருகில் நான்கு முகம் கொண்ட தெரு விளக்குகள் அமைத்தல் பணிக்கு ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர்/ தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சேலம் அவர்களது செயல் முறை கடிதம் ந.க.எண்.629/2020/அ–2, நாள்.11.02.2021ல் நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்ற கடிதத்தினை தனிஅலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மாவட்ட ஆட்சித்தலைவர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சேலம் அவர்களின் செயல் முறை கடிதம் ந.க.எண்.629/2020/அ–2, நாள்.11.02.2021ல் நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்ற கடிதத்தினை தனிஅலுவலர் பார்வையிட்டு பதிவு செய்யலாம் (ந.க.எண்.647/எ/2021/இ1)

7. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காகவும், தற்போது மழைக்காலம் என்பதால் பொதுமக்களுக்கு கபசுர குடிநீர் காய்ச்சி கொடுக்க வேண்டி உள்ளதால் 100கிலோ கபசுர குடிநீர் பவுடர் டாம்கால் நிறுவனத்தின் மூலம் வாங்குவதற்கு தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட 100கிலோ கபசுரகுடிநீர் பவுடர் வாங்க ஆகும் செலவினத்தொகை ரூ.80,000/– தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

3. கொரான 2ம் அலை கொரானதொற்றுநோய்அதிகமாக உள்ளதால்தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று உள்ளதை அங்கீகரிக்கலாம்(ந.க.எண் 2117/2018/எச்1).

8. இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் டெங்கு தடுப்பு பணியில் கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு DBC பணியாளர்களின் ஒப்பந்தக்காலம் 30.04.2021-ம் தேதியுடன் முடிவடைகிறது. மேலும், தேர்தல் பணி மற்றும் வாக்கு எண்ணிக்கையின் காரணமாக மே 2021-ம் மாதத்திற்கு ஆகும் செலவினத் தொகையை 29.01.2021-ம் மாதம் கொடுக்கப்பட்ட ஆணையில் உள்ள தொகையில் செலவினத்தை மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. அவசர அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினம் ரூ. 2,50,000/- நகராட்சி பொது நிதிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்(ந.க.எண் 3163/2017/எச்1).

9. இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக தேவையான லைசால் (Lysol) - 100 litre லைசால் வாங்க தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம் லிமிடெட் தயாரிப்பு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விபரம் மற்றும் உத்தேச செலவினம் ரூ.20,000/- (இருபதாயிரம்) மட்டும் நகராட்சிபொது நிதியிலிருந்து செலவழிக்க மன்றத்தின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம் லிமிடெட் நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத்தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிக்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்(ந.க.எண் 1416/2021/எச்1).

10. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா டெங்கு தடுப்பு பணியில் கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு DBC பணியாளர்களின் ஒப்பந்தக்காலம் 31.05.2021-ம் தேதியுடன் முடிவடைவதால் மேலும் 3 மாதங்களுக்கு 01.06.2021 முதல் 31.08.2021 வரை ஒப்பந்த அடிப்படையில் மகளிர் சுயஉதவி குழுக்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறவும் அதற்கான செலவினம் ரூ.15,00,000/-க்காக தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. ஒப்பந்த அடிப்படையில் மகளிர் சுயஉதவி குழுக்களிடமிருந்து குறுகிய கால ஒப்பந்தப் புள்ளி பெற்று 3-மாதங்களுக்கு DBC பணியாளர்களை பணிக்கு வைத்துக் கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்(ந.க.எண் 3163/2017/எச்1).

11. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக லைசால் தேவைப்படுவதால் ஒப்பந்தப்புள்ளிக் கோரி வாங்குவதற்கும், உத்தேச செலவினம் ரூ. 2,50,000/–க்குள் லைசால் வாங்கி கொள்ள தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட லைசால் வாங்க ஆகும் செலவினத்தொகை ரூ.2,50,000/– தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்(ந.க.எண் 1416/2021/எச்1).

12. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்கும் மற்றும் சமூக கழிப்பிடம் இவற்றிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் பிளீச்சிங் பவுடர் 10,000 கிலோ தேவைப்படுவதால் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோர தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட 10,000 கிலோ பிளீச்சிங் பவுடர் வாங்க ஆகும் செலவினத்தொகை ரூ.7,00,000/– தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. செலவினத் தொகையை பொதுநிதி அல்லது பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம் (ந.க.எண் 271/2021/எச்1).

13. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்கு மருந்து தெளிப்பு பணிக்காக 3–மாத கால தேவைக்கு 30,000 லிட்டர் ஹைப்போ குளோரைட் தேவைப் படுவதால் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோர தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட 30,000 லிட்டர் ஹைப்போ குளோரைட் வாங்க ஆகும் செலவினத்தொகை ரூ. 6,00,000/– தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2.செலவினத் தொகையை பொதுநிதி அல்லது பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்(ந.க.எண் 1474/2021/எச்1).

14. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் வார்டுகள் 1 முதல் 33 வரை உள்ள வீடுகளில் கொரோனா வைரஸ் காய்ச்சல் பாதிக்கப்பட்ட நபர்களின் வீடுகளில் ஒட்டப்படும் COVID–19 கொரோனா பாதிக்கப்பட்ட வீடு என்ற ஸ்டிக்கர் 2000 எண்ணிக்கை தேவைப்படுவதால் உள்ளூர் ஆப்செட் நிறுவனத்திடம் வாங்குவதற்கு தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப் படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. செலவினத் தொகை ரூ. 15,000/– தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. செலவினத் தொகையை பேரிடர் மேலாண்மை நிதி அல்லது பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்(ந.க.எண் 1824/2020/எச்1).

15. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் வார்டுகள் 1 முதல் 33 வரை உள்ள வீடுகளில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்கு ILI கணக்கெடுப்பு பணிக்காக 5000 எண்ணிக்கை படிவங்கள் தேவைப்படுவதால் உள்ளூர் ஆப்செட் நிறுவனத்திடம் வாங்குவதற்கு தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. செலவினத் தொகை ரூ. 10,000/– தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2.செலவினத்தொகையை பேரிடர் மேலாண்மை நிதி அல்லது பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம் (ந.க.எண் 1824/2020/எச்1).

16. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக நீர்த்த சுண்ணாம்புத்தூள் 20,000 கிலோ தேவைப்படுவதால் நீர்த்த சுண்ணாம்புத்தூள் தயாரிப்பாளர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,50,000/–க்குள் வாங்கி கொள்ள தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப் படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட நீர்த்த சுண்ணாம்புத்தூள் 20,000 கிலோ வாங்க ஆகும் செலவினத்தொகை ரூ.2,50,000/– தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. செலவினத் தொகையை பேரிடர் மேலாண்மை நிதி அல்லது பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்(ந.க.எண் 1429/2021/எச்1).

17. தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2021 ஏப்ரல் 6ல் நடைபெற உள்ளதால் மாவட்ட ஆட்சித்தலைவர் சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண் அ1/27772/2020, நாள்22.03.2021மற்றும் வருவாய் கோட்டாட்சியர் (ம) தேர்தல் நடத்தும் அலுவலர், ஆத்தூர்,அவர்களின் கடிதம் ந.க.எண் 456/2021/அ1, நாள்24.03.2021, ஆகிய கடிதங்களில் கேட்டு கொண்டதற்கிணங்க, ஆத்தூர் நகராட்சி பகுதியில் உள்ள பள்ளிகள் மற்றும் ஒருகிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட மையங்களில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு சாவடி மையங்களில் அடிப்படை வசதிகளான தண்ணீர் வசதி, கழிப்பிட வசதி சாய்வு தளம் வசதி, மின் விளக்கு வசதி , மின்விசிறி வசதிகள், பொதுமக்கள் சிரமம் இன்றி வரிசையில் நின்று வாக்களிக்க ஏதுவாக சாமியான பந்தல், வாக்கு சாவடி மையங்களுக்கு தேவையான டேபிள்,சேர் மற்றும் வாக்கு சாவடியில் அலுவலர்களுக்கு குடிநீர் தேவையினை முன்னிட்டு 20 லிட்டர் கொள்ளளவு கொண்ட RO கேன் தண்ணீர் சப்ளை செய்தல் ஆகிய பணிகள் வாடகை அடிப்படையில் மேற்கொண்டமைக்கும் அதற்கான செலவினம் ரூ.7,00,000/-க்கு பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன்பிரிவு விதி 15ன் கீழ் மேற்கொண்டமைக்கு மேற்காணும் பணியினை செய்து முடித்துள்ளதை தனிஅலுவலர் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அனுமதி வழங்கலாம். செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொண்டதையும் தனி அலுவலர் ஏற்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி தமிம்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு விதி 15ன் கீழ் மேற்கொண்டதையும் தனிஅலுவலர் பதிவு செய்யலாம். (ந.க.எண் 806 /2021/இ1)

18. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்33ல் கண்ணாடி மில் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டுள்ளது.மேற்படி ஆழ்துளை கிணற்றிலிருந்து பைப் லைன் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு தனிஅலுவலர் தீர்மானம் எண் 18 , நாள்: 27.01.2021ன் படி ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கியதன் பேரில் மேற்படி பணிக்கு 26.02.2021ல் ஒப்பந்தப் புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு வரபெற்றதினை முடிவு செய்ய தனிஅலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது .

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எ.லோகநாதன். ஒப்பந்ததாரர், ஆத்தூர் | 0.08% மதிப்பீட்டை விடகுறைவு |
| 2 | திரு.ஆர்.செல்லக்கண்ணு. ஒப்பந்ததாரர், ஆத்தூர் | 0.48% மதிப்பீட்டை விடஅதிகம் |

அலுவலகக் குறிப்பு

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விடகுறைந்த 0.08% ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எ.லோகநாதன். ஆத்தூர் என்பவரின் ஒப்பந்தப் புள்ளியினை தனிஅலுவலர் ஏற்று வேலை உத்திரவு வழங்கலா

2. இப்பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

3. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவர் முன் அனுமதி வழங்கியதையும் தனிஅலுவலர் ஏற்கலாம். (ந.க. எண் 00329/21/இ2)

19. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான மேல் நிலை நீர் தேக்க தொட்டிகளுக்கு காவலர் பணி மற்றும் நகர் முழுவதும் உள்ள மின் மோட்டார்களை இயக்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள போதிய ஆட்கள் குடிநீர் பிரிவில் இல்லாத காரணத்தால் (Out sourcing) ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் விலை விகிதத்தில் 10 பணியாளர்களை கொண்டு 01.10.2020 முதல் 31.03.2021 வரை பணிகள் மேற்கொள்ள 30.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேலும் 01.04.2021 முதல் 30.09.2021 வரை பணிகள் மேற்கொள்ள 26.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 3.30 மணியளவில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. ஆனால் அன்று 4.30 மணி முதல் தேர்தல் நன்நடத்தை விதிகள் அமுலுக்கு கொண்டு வந்துவிட்டதால் கோப்பின் பேரில் நடவடிக்கை எடுக்க இயலாத நிலை உள்ளது. எனவே மேற்படி பணியானது குடிநீர் அத்தியாவசிய பணியாக உள்ளதால் 01.04.2021 முதல் தேர்தல் நன்நடத்தை விதிகள் விலக்கி கொண்டதன் படி மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்கும் வரை ஏற்கனவே பணிகள் மேற்கொண்ட அதே விலை விகிதத்தில் பணிகள் மேற்கொள்ள அதே ஒப்பந்ததாரரான திரு.அபுபக்கர் சித்திக் அவர்களின் விருப்பத்தின் பேரில் பணிகள் மேற்கொள்ள ஏற்கனவே உள்ள பணி உத்திரவினை நீட்டிப்பு செய்து தரவும் மதிப்பீடு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு தனிஅலுவலர் அவர்களின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

1. தனிஅலுவலர் அனுமதிக்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம் . (ந.க.எண். 2351 /2021/இ2)

2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டதை தனிஅலுவலர் ஏற்கலாம்

20. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக பொதுமக்களுக்கு கபசுரகுடிநீர் காய்ச்சி கொடுக்க வேண்டி உள்ளதால் 150கிலோ கபசுரகுடிநீர் பவுடர் மற்றும் 150 நிலவேம்பு பவுடர் தேவைப்படுவதால் டாம்கால் நிறுவனத்தின் மூலம் வாங்குவதற்கு தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட 150கிலோ கபசுரகுடிநீர் பவுடர் மற்றும் 150 நிலவேம்பு பவுடர் வாங்க ஆகும் செலவினத்தொகை ரூ. 2,50,000/– தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. செலவினத் தொகையை பேரிடர் பேரிடர் நிதி அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்துமேற்கொள்ளதனிஅலுவலர்அனுமதிக்கலாம் (ந.க.எண்.2117 /2018/எச்1).

21. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா டெங்கு தடுப்பு பணியில் கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு DBC பணியாளர்களின் ஒப்பந்தக்காலம் 31.05.2021–ம் தேதியுடன் முடிவடைவதால் மேலும் 3 மாதங்களுக்கு 01.06.2021 முதல் 31.08.2021 வரை ஒப்பந்த அடிப்படையில் மகளிர் சுய உதவி குழுக்களின் வாயிலாக பணிமேற்கொள்ள தனி அலுவலரின் முன்அனுமதியுடன் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த அடிப்படையில் டெங்கு தடுப்பு பணிகளை செய்ய 21.05.2021 அன்று வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

1) ஸ்ரீ அம்மன் மகளிர் SHG–ரூ.356 /per day
2) கற்றல் ஆத்தூர் கோட்டை SHG–ரூ. 360/per day
3) ரோஸ் மகளிர் SHG-ரூ. 370/per day

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற 3 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ அம்மன் மகளிர் SHG ஆத்தூர் என்ற குழுவிற்கு டெங்கு தடுப்பு பணிக்காலத்திற்கான அடுத்த 3 மாத காலத்திற்கு (01.06.2021–31.08.2021) ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி பெற்று 3–மாதங்களுக்கு DBC பணியாளர்களை பணிக்கு வைத்துக்கொள்ள பணி உத்தரவு வழங்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம் (ந.க.எண். 3163 /2017/எச்1).

22 . இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் கொரோனா வைரஸ் காய்ச்சல் நடவடிக்கை மற்றும் சமுதாய கழிப்பிடம் இவற்றிற்காக ஹைப்போ குளோரைடு வாங்க தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விபரம் மற்றும் உத்தேச செலவினம் ரூ. 6,00,000/– மட்டும் பேரிடர் மேலாண்மை நிதி அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிக்க மன்றத்தின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி விபரம்

1. Sri Kaliyamman Trading Corporation – ரூ. 16.52/1 litre.
2. Sri Athanur Amman Traders – ரூ. 20.06/1 litre

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Sri Kaliyamman Trading Corporation நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத்தொகையை பேரிடர் மேலாண்மை நிதி அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிக்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்(ந.க.எண். 1474 /2021/எச்1).

23. இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் கொரோனா வைரஸ் காய்ச்சல் நடவடிக்கைக்காக லைசால் வாங்க தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விபரம் மற்றும் உத்தேச செலவினம் ரூ. 2,50,000/– மட்டும் பேரிடர் மேலாண்மை நிதி அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிக்க மன்றத்தின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி விபரம்

1. Sri Kaliyamman Trading Corporation – ரூ. 164.02/1 litre.
2. Sri Athanur Amman Traders – ரூ. 171.10/1 litre.

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Sri Kaliyamman Trading Corporation நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத்தொகையை பேரிடர் மேலாண்மை நிதி அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிக்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்(ந.க.எண். 1474 /2021/எச்1).

24. இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் கொரோனா வைரஸ் காய்ச்சல் நடவடிக்கை மற்றும் சமுதாய கழிப்பிடம் இவற்றிற்காக பிளீச்சிங் பவுடர் வாங்க தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விபரம் மற்றும் உத்தேச செலவினம் ரூ. 7,00,000/– மட்டும் பேரிடர் மேலாண்மை நிதி அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிக்க மன்றத்தின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி விபரம்

1. Sri Kaliyamman Trading Corporation – ரூ. 58.41/1 kg.
2. Sri Athanur Amman Traders – ரூ. 66.08/1 kg

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Sri Kaliyamman Trading Corporation நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத்தொகையை பேரிடர் மேலாண்மை நிதி அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிக்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்(ந.க.எண். 271 /2021/எச்1).

25. இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் கொரோனா வைரஸ் காய்ச்சல் நடவடிக்கைக்காக நீர்த்த சுண்ணாம்புதூள் வாங்க தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விபரம் மற்றும் உத்தேச செலவினம் ரூ. 2,50,000/– மட்டும் பேரிடர் மேலாண்மை நிதி அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிக்க மன்றத்தின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி விபரம்

1. P. Kannupaiyan – ரூ. 12.00/1 kg.
2. K.R. Murugesan – ரூ. 13.00/1 kg

அலுவலக குறிப்பு :

1. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள P. Kannupaiyan, Valappady அவர்களுக்கு சப்ளை உத்திரவு வழங்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத்தொகையை பேரிடர் மேலாண்மை நிதி அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிக்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்(ந.க.எண். 1429 /2021/எச்1).

26 . இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக களப்பணியாளர்கள் ஒவ்வொரு வீடாக சென்று வீட்டில் உள்ள அனைவருக்கும் காய்ச்சல் மற்றும் ஆக்சிஜன் அளவு பார்ப்பதற்கு Thermal Scanner-150 மற்றும் Plus Oximeter-150 தேவைப்படுவதால் செலவினத் தொகையை ரூ. 3,20,000/– அனுமதிக்க தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையின் அவசர அவசியம் கருதி உரிய நட்வடிக்கை மேற்கொள்ளதனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத்தொகை நகராட்சி பொது நிதி அல்லது பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம் (ந.க.எண். 1546 /2021/எச்1).

27. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக களப்பணியாளர்கள் ஒவ்வொரு வீடாக சென்று வீட்டில் உள்ள அனைவருக்கும் காய்ச்சல் மற்றும் ஆக்சிஜன் அளவு பார்ப்பதற்கு Pulse Oximeter – 150 தேவைப்படுவதால் செலவினத் தொகை ரூ. 2,10,000/– அனுமதிக்க தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையின் அவசர அவசியம் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. செலவினத்தொகை நகராட்சி பொது நிதி அல்லது பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்(ந.க.எண். 1547 /2021/எச்1.)

28. ஆத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் மார்ச்–2021, ஏப்ரல்–2021 மற்றும் மே–2021 ஆகிய மாதங்களுக்கான நாட் குறிப்பினை தனி அலுவலரின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

தனிஅலுவலர் பதிவு செய்யலாம்.

தனி அலுவலர்,
ஆத்தூர் நகராட்சி,